**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**நாள்.09.01.2026**

**O.S. No.237/2014**

**பி.வா.சா. 1– கிருஷ்ணசாமி**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் எழுதப்படிக்கத் தெரியுமா என்றால் அரைகுறையாக தமிழ் எழுத தெரியும் முழுமையாக என்னால் தமிழை வாசிக்க முடியும். வழக்கு தாக்கல் செய்த 1ம் வாதி பரமு அம்மாள் மற்றும் 5 ம் வாதி ராமையா வழக்கு நிலுவையின் போது இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். 1ம் வாதி பரமு அம்மாள் மற்றும் 5 ம் வாதி ராமையா ஆகியோருக்கு 2 முதல் 4 மற்றும் 6 வாதிகள் மட்டும் வாரிசுகள் என்றால் சரிதான். வழக்குச் சொத்தினுடைய சர்வே எண் 270/4 என்றால் சரிதான். வழக்குச் சொத்தினுடைய மொத்தம் விஸ்தீரணம் 60 செண்ட் என்றால் சரிதான். பி.வா.சாஆ.1 நான் கிரையம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் எழுதும்போது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் எழுதும்போது அதில் சொல்லப்பட்டுள்ள வாசகங்கள் எழுதும்போது 1 முதல் 3 பிரதிவாதிகள் உடன் இருந்தோம் என்றால் நான் இல்லை என் அம்மா லட்சுமி, முத்துக்குமார், கோட்டைச்சாமி ஆகியோர் என் அண்ணன்கள் வாசகங்கள் எழுதும் போது இருந்தார்கள் என்னை கையெழுத்து போடும்போது மட்டும் அழைத்தார்கள். பி.வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் முன்பாத்தியஸ்தரால் உயில் ஆவணத்தின்படி பாத்தியப்பட்டதாக வாசகங்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் முன்பாத்தியஸ்தரால் உயில் ஆவணத்தின்படி பாத்தியப்பட்டதாக சொல்லப்பட்டதற்கு நான் மாறுபடுகிறேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் முன்பாத்தியஸ்தரால் சொல்லப்பட்ட உயில் ஆவணத்தை நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்யக்கேட்டு வாதிகள் தரப்பில் எங்களுக்கு குறிப்பாணை கொடுக்கப்பட்டது என்றால் சரிதான் ஆனால் அந்த உயில் ஆவணம் எங்கள் வசம் இல்லை.

பி.வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் முன்பாத்தியஸ்தரால் சொல்லப்பட்ட உயில் ஆவணத்தை நகல் எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எந்தவித நடவடிக்கையும் நாங்கள் எடுக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ. 3 கிரைய ஆவணத்தில் எனது முன்பாத்தியஸ்தரால் சொல்லப்பட்ட பெரிய தாய் பெயரிலான உயில் ஆவணத்தின் ஒளிநகல் என்றால் சரிதான் நான் பெரியதாயிடமிருந்து கிரையம் பெற்றுள்ளேன். **சாட்சி மேற்படி பெரியதாய் பெயரிலான உயில் ஆவணத்தின் ஒளிநகலை ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வா.சா.ஆ.13 உயிலை எழுதிவைத்த தவசிக்கண்ணுக்கு 15 செண்ட் நிலம் வெங்கடாசலபதி என்பவரிடமிருந்து 15.10.1973 தேதியிட்ட ஆவணம் மூலமாக பாத்தியப்பட்டதாக வாதிகள் வழக்கில் சொல்லியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 15.10.1973 தேதியிட்ட ஆவணம் குறித்து எனக்கு தெரியாதபோது, அதைப் பற்றி நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் மறுத்து முதல் விசாரணை வாக்குமூலத்தில் பத்தி 5 ல் தெரிவித்திருந்தால் அது தவறு என்றால் 15.10.1973 தேதியிட்ட ஆவணம் என்னிடம் இல்லை அதனால் எனக்குத் தெரியாது அப்படி ஒரு ஆவணம் கிடையாது அதனால் மறுத்துள்ளேன். 15.10.1973 தேதியிட்ட ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் நகல் எடுத்துப் பார்க்க முயற்சித்தேனா என்றால் முயற்சிக்கவில்லை. நான் கிரையம் வாங்கும்போது கிரையம் பெற்ற சொத்திற்கு முன் ஆவணங்கள் மற்றும் வில்லங்க சான்றிதழை எடுத்து பார்த்தேனா என்றால் வில்லங்க சான்றிதழ் எடுத்துப் பார்த்தேன். வில்லங்க சான்றிதழில் என்னென்ன ஆவணங்கள் தபசில் சொத்திற்கு துலங்கியது என்றால் சரியாக ஞாபகமில்லை வில்லங்க சான்றிதழில் பெரியதாய் பெயர் இருந்தது அதனால் பத்திரம் முடித்துவிட்டேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் தவசிக்கண்ணுக்கு 15 செண்ட் நிலம் வெங்கடசாமி என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற 15.10.1973 தேதியிட்ட ஆவணம் என்றால் எனக்குத் தெரியாது.

பெரியதாயிடமிருந்து கிரையம் பெற்ற பிறகு நான் பட்டா மாற்றியது தவறு என என் மீது திருநெல்வேலி RDO அலுவலகத்தில் 5 வது வாதியால் மனு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். திருநெல்வேலி RDO அலுவலகத்தில் ஆஜராகி எங்களது வாக்குமூலத்தை சொன்னோம் என்றால் சரிதான். திருநெல்வேலி RDO வின் நடவடிக்கைகள் பற்றி எனக்கு 2014 ம் ஆண்டிலேயே நன்கு தெரியும் என்றால் சரிதான். திருநெல்வேலி RDO வின் நடவடிக்கைகளின் படி நான் பட்டா மாற்றியது தவறு என்றும், பி.வா.சா.ஆ.1 முதல் 3 கிரைய ஆவணம் மோசடியானது அதை நீதிமன்றம் மூலமாக ரத்து செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட திருநெல்வேலி RDO வின் உத்தரவின் படிதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கிற்கு 2014 ம் ஆண்டு அழைப்பாணை வந்துவிட்டது என்றால் அழைப்பாணை வரவில்லை. எனக்கு இந்த வழக்கிற்கு 2014 ம் ஆண்டு அழைப்பாணை வந்துவிட்டது நான் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் மூலமாக ஆஜரான பிறகு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் எனக்கு எந்த தகவலும் வரவில்லை. எனக்கு நீதிமன்றம் மூலமாக சீர்திருத்த மனுவில் அனுப்பப்பட்ட அழைப்பாணையை பெற்றபிறகு மீண்டும் இந்த நீதிமன்றத்தில் நான் ஆஜரானேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்தை கிரையம் பெறும்போது பெற்ற வில்லங்கச் சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் உண்டா என்றால் எந்த காரணமும் இல்லை. வா.சா.ஆ.13 உயிலில் சர்வே எண். 270/4 ல் மொத்தமாக 20 செண்ட் என இடைச் செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் தெரியாது. சர்வே எண். 270/4 க்கு தென்பக்கம் சர்வே எண். 270/5 என்றால் சரிதான். மேற்படி சர்வே எண். 270/5 ல் உள்ள நிலம் வா.சா.ஆ.13 உயிலின் மூலமாக பெரியதாய்க்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் அது தெரியாது ஆனால் சர்வே எண். 270/5 ல் உள்ள நிலம் பெரியதாய்க்கு பாத்தியப்பட்டது. பெரியதாய்க்கு தனிப்பட்ட முறையில் 30 செண்ட் இருந்தது என்பதற்கு என்ன ஆவணத்தைப் பார்த்தேன் என்றால் பெரியதாய் பெயரிலான எந்த

ஆவணங்களையும் நான் பார்க்கவில்லை ஆனால் பெரியதாய் கையெழுத்துப் போட்டார். எனக்கு கிரையம் கொடுத்த பெரியதாய் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் ஆமாம். எனக்கு கிரையம் கொடுத்த பெரியதாயை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் ஆமாம். 1 முதல் 3 பிரதிவாதிகள் உடன் பிறந்தவர்கள் என்றால் 1வது பிரதிவாதி எனது உறவினர், முத்துக்குமார் எனது அண்ணன். பி.வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் சொத்து விபரத்தில் சர்வே எண். 270/4 ல் உள்ள மொத்த சொத்தான 60 செண்ட்டும் பெரியதாய்க்கு பாத்தியப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது அவ்வாறு 60 செண்ட்டும் பெரியதாய்க்கு பாத்தியப்பட்டதாக இருந்ததா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் தபசில் சொத்து விபரத்தின்படி சர்வே எண். 270/4 மற்றும் சர்வே எண். 270/5 பி ல் உள்ள மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 1 செண்ட் 12 ல் வடபக்கம் செண்ட் 3 க்கு கீழ்பக்கம் செண்ட் 6 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலே குறிப்பிடப்பட்ட ஏக்கர் 1 செண்ட் 12 ல் வடபக்கம் செண்ட் 3 யாருக்குப் பாத்தியப்பட்டது என்றால் பெரியதாய்க்கு. பி.வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் தபசில் சொத்து விபரத்தில் நான் கிரையம் பெற்ற சொத்திற்கு வடக்கு எல்கையாக பரமு அம்மாள் மனை என சொல்லப்பட்டது என்றால் எனது இடத்திற்கு வடக்கில் நடைபாதை உள்ளது அதற்கு அடுத்து தான் பரமு அம்மாள் மனை உள்ளது. சர்வே எண். 270/4 ல் உள்ள வடபாதி 30 செண்ட் 1வது வாதியினால் வா.சா.ஆ.1ன் படி கிரையம் பெறப்பட்டு, தனித்து அனுபவம் செய்து வரப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் பெரியதாய்க்கு உயில் எழுதிய தவசிக்கண்ணு தேவரால் எழுதப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் இந்த வழக்கு 6, 7 தபசில் சொத்துக்கள் பற்றி என் கையிருப்பு புஞ்சைக்கும், குத்தாலப்பாண்டியன் புஞ்சைக்கும் வடக்கு என குறிப்பிட்டு தான் தவசிக்கண்ணு தேவரால் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. எனது முன்பாத்தியஸ்தரே குத்தாலப்பாண்டியனுக்கு இடம் இருப்பதாக ஒப்புக்கொண்ட பின்பு அதை மறுத்து கட்சி செய்ய எனக்கும் பெரியதாய்க்கும் உரிமை இல்லை என்றால் குத்தாலப்பாண்டியனுக்கு இடம் இல்லை.

பெரியதாய்க்கு உயில் எழுதிய தவசிக்கண்ணு தேவர் கிரையம் வாங்கிய 15.10.1973 தேதிய கிரைய ஆவணத்தில் குத்தாலப்பாண்டியன் இடத்திற்கு கிழக்கு என எல்கை காண்பித்து தான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 15.10.1973 தேதிய கிரைய ஆவணத்திற்கு முன் ஆவணமான 1969 ம் வருட வெங்கடாசலபதி கிரைய ஆவணத்திலும் குத்தாலப்பாண்டியன் இடத்திற்கு கிழக்கு என எல்கை காண்பித்து தான் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முன்ஆவணங்கள் அனைத்திலும் 15 செண்ட் இடம் தான் தவசிக்கண்ணு தேவருக்குப் பாத்தியம் என்பதால் அதற்கு கூடுதலாக உரிமை கோர பெரியதாய் மற்றும் எனக்குதகுதி இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள 30 செண்ட் இடத்திற்கு தென்பக்கம் உள்ள 30 செண்டில் கீழ்பக்கம் உள்ள 15 செண்டினை குத்தாலப்பாண்டியனிடமிருந்து வா.சா.ஆ.5 மூலமாக 5 வது வாதி கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் குத்தாலப்பாண்டியனுக்கு அங்கு இடமே இல்லை. அதைப் போல 60 செண்ட்டில் மீதமுள்ள 15 செண்டினை பெரியதாய் 1 வது வாதிக்கு வா.சா.ஆ.6 மூலமாக கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் மால்கள் தவறாக போடப்பட்டு தவறாக எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1, 5 மற்றும் 6 ன் படி சர்வே எண்.270/4 ல் உள்ள 60 செண்ட் இடமும் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1, 5 மற்றும் 6 ன் படி சர்வே எண்.270/4 ல் உள்ள 60 செண்ட் இடமும் வாதிகளால் கிரையம் பெற்ற பிறகு சர்வே எண்.270/4 ல் எந்தவிதமான இடமும் கிடையாது நாங்கள் அனுபவித்ததும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1, 5 மற்றும் 6 ன் படி சர்வே எண்.270/4 ல் உள்ள 60 செண்ட் இடமும் வாதிகளால் கிரையம் பெற்ற விபரம் நன்கு பரிசீலிக்கப்பட்டு, வா.சா.ஆ. 7 திருநெல்வேலி கோட்டாட்சியரால் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 7 உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்தேனா என்றால் நாங்கள் மேல்முறையீடு தாக்கல் செய்வதற்கு முன்பாக அவர்களாகவே வழக்கு தாக்கல் செய்துவிட்டார்கள். வா.சா.ஆ.13 உயில் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டால் உண்மை விபரம் நீதிமன்றத்திற்கு தெரியவந்துவிடும் எங்களுக்கு பாதகமாக அமைந்துவிடும் என்பதால் எங்களால் வா.சா.ஆ.13 உயில் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அப்படி ஒரு ஆவணமே கிடையாது. சர்வே எண்.270/4 ல் உள்ள 60 செண்ட் இடத்தை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக பி.வாசா.ஆ.3 சர்வே எண்.270/4 ல் உள்ள 60 செண்ட் இடமும் காட்டப்பட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

வழக்கு 1வது தபசில் சொத்தைப் பொறுத்து வழக்கு மூலம் இல்லை என நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்திலும், எதிர்வழக்குரையிலும் 6 வது தபசில் சொத்தின் தென்புறத்தில் கீழ்கடைசியில் 4 செண்ட் இடத்தினை 1 வது பிரதிவாதியும், அதற்கு மேல்புறம் 3 செண்ட் இடத்தினை 2, 3 பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் ஆனால் பி.வாசா.ஆ.3 ல் 6 செண்ட் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.270/4 ல் 3 செண்ட், சர்வே எண்.270/5 ல் 3 செண்ட் கிரையம் பெற்றுள்ளேன். 1வது வாதி தனக்குப் பாத்தியப்பட்ட 1வது தபசில் சொத்தில் இருந்து 2 வது தபசில் சொத்தை 2 வது வாதிக்கும், 3 வது தபசில் சொத்தை 3 வது வாதிக்கும், 4 வது தபசில் சொத்தை 4 வது வாதிக்கும் நன்கொடை கொடுத்து 2 முதல் 4 வாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 5, 6, 7 தபசில் சொத்துக்கள் வாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல அது காலியிடம். பெரியதாய் கைவசம் எந்த சொத்தும் இல்லாமல் அவரால் பிறப்பிக்கப்பட்ட பி.வா.சா.ஆ.1, 2 ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உரிமையில்லாத நபரால் பிறப்பிக்கப்பட்ட பி.வா.சா.ஆ.1, 2 ஆவணங்கள் சட்டப்படி ரத்து செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 முதல் 3 வாதிகளின் சொத்தின் மீதான உரிமைக்கு தொடர்நிலையான இடையூறை ஏற்படுத்துகிறது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 முதல் 3 சட்டப்படி ரத்து செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதால் வாதிகள் கோரிய விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. வாதிகளின் வழக்கும் பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படத்தக்கது என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>

<u>மறுவிசாரணை இல்லை.</u>

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.09 17:26:58 +0530